2014 பிப்ரவரி 1]

நோய்களுக்கு மருத்துவம் பார்க்க அஞ்செட்டியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு டெம்போ, லாரி போன்ற வாகனங்களின்மூலம்தான் கால்நடைகளை ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கே கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத் தரப்படுமென்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடுமையான வறட்சி இருப்பதால், கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக நுண்ணீர் பாசன வசதியோடு, மானிய விலையில் புல் வளர்த்து கால்நடைகளுக்கு வழங்கப்படுமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 24.50 கோடி ரூபாய் செலவிலே, 30 மாவட்டங்களிலும் பசுந்தீவனம் வளர்க்கப்பட்டு, அந்தந்த மாவட்ட தீவனக் கிடங்குகள்மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலும் நிச்சயமாக அதை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

காகித அட்டை தொழிற்சாலை

***41183—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் பகுதியில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 பிப்ரவரி 1

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் 7–5–2013 அன்று, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 1,200 கோடி ரூபாய் 'முதலீட்டில்' ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் உற்பத்தித் திறன்கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் பிரிவினை, திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, ஸ்ரீரங்கம் தொகுதி, மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதி 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அந்த அடிப்படையில், கிட்டத்தட்ட ஆறு மாத காலத்திற்குள்ளாகவே அதற்கான நிலத்தை கையகப்படுத்தி, இப்போது அந்தப் பணிகளைத் துவங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். கூடியவிரைவில் அந்தப் பணிகளைத் தொடங்கவிருக்கின்ற காரணத்தினால், கும்பகோணம் பகுதியில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மேலும் ஒரு காகிதம் தயாரித்திடும் தொழிற்சாலை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தஞ்சை மாவட்டம் முழுக்க, முழுக்க விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பகுதி. தொழிற்சாலைகள் அங்கு மிகவும் குறைவு. அங்கு அதிகமாக நெற்பயிர்கள் பயிரிடக்கூடிய காரணத்தினாலே, வைக்கோல்களும், காகிதம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களும் அதிகமாகக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதனால், தஞ்சை மாவட்டத்தின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்திலாவது இதுபோன்ற ஒரு தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகித அட்டை தொழிற்சாலை முழுத் திறனுடன் நிறுவப்பட்டு, இலாபகரமாக இயங்க நாளொன்றுக்கு 660 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கவேண்டும். ஆண்டுக்கு 2 இலட்சம் டன் காகித அட்டை அலகு உற்பத்தி செய்ய பின்வரும் வசதிகள் தேவைப்படும்:*

ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும்; தண்ணீர் உபயோகம் 25 ஆயிரம் கனமீட்டர் வேண்டும்; 2 இலட்சத்து 60 ஆயிரம் டன் கரும்புச் சக்கை ஆண்டொன்றுக்குத் தேவை; 1 இலட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் டன் மரக்கூழ் ஆண்டொன்றுக்குத் தேவை; 31 ஆயிரம் டன் உபயோகப்படுத்தப்பட்ட காகிதம் ஆண்டொன்றுக்குத் தேவை; 80 ஆயிரம் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு வகையான மரக்கூழ்கள் தேவை. மூலப்பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே தொழிற்சாலையை நிறுவுவது கடினமாக இருக்கும். இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கைத்தறிக் குழுமம்

***10252—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் கைத்தறிக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*